Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol. 37—No. 4

CONNEMARA PUBLIC LIBRARY
11 APR 1964

# சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 37 | குரோதி சித்திரை 1964 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை — பக்கம்

திருவாசகத் தலங்கள் ... 95
திருமுறைத் தொடர்களின் பொருள் கோள் ... 99
அருளாசிரியரும் ஆணவ நீக்கமும் ... 105
திருவாசகம் பேசும் திருத்தொண்டர்கள் ... 112
மதிப்புரை ... 120
சமாஜச் செய்திகள் ... 121

பத்திராசிரியர்: மு. அருணசலம், எம். ஏ.,

உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்

சைவ சித்தாந்த மகா சமாஜம்

12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா 3 | தனிப்பிரதி அணு 4

## சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம்
## இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் கண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்.)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, திருக்குறள் அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், உண்மை விளக்கம், திருவருட்பயன், கொடிக்கவி, வினாவெண்பா.

4. உரைநடை: சைவத்தின் சமரசம் (திரு. வி. க.) வாகீசர் அல்லது மெய்யுணர்வு (சிவக்கவிமணி) பட்டினத்தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா.சு. பிள்ளை M.A,M.L.) பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுகநாவலர்)

## சைவப் புலவர்

1. இலக்கணம்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம் பூரணம்) தருக்கசங்கிரகம் (சிவஞான முனிவர்)

2. இலக்கியம்: பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்.

3. சாத்திரம்: சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை) சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம்.

4. உரைநடை: சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி, (ந. சிவகுருநாதபிள்ளை) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார்) சிவஞான முனிவர் உரைநடை நூல்கள், பெரியபுராண சூசனம் (ஆறுமுக நாவலர்)

Reg. M. 2330

CONNEMARA PUBLIC LIBRARY
APR 1964

உ
சிவமயம்

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 37 | குரோதி சித்திரை 1964 ஏப்ரல் | இதழ் 4

## திருவாசகத் தலங்கள் ★ —:ஆசிரியர்:—

திருவாசகத்தில் மாணிக்கவாசகப் பெருமானால் பெயர் குறிப்பிடப்பட்ட தலங்களின் பட்டியல் ஒன்று 1960 ஆம் வருடம் மே மாதம் சித்தாந்தம் இதழில் (பக்கம் 154–155) வெளிவந்தது. அத்தலங்கள் பற்றிய சில கருத்துக்களை இங்கு நினைவு கூர்தல் பொருந்துவதாகும்.

அத்தலங்களுள் தேவாரப் பதிகம் பெற்ற தலங்கள் பின்வருவன ஆகும். அண்ணாமலை, கச்சியேகம்பம், ஐயாறு கடம்பூர், கயிலை, குற்றாலம், சிராப்பள்ளி, தில்லை (கோயில்), துருத்தி, பழனம், பராய்த்துறை, பனையூர், புறம்பயம், பூவணம், மதுரை, வாஞ்சியம், வெண்காடு, அவிநாசி, ஆரூர், ஆனைக்கா, இடைமருது, ஈங்கோய்மலை, கழுக்குன்று, கழுமலம். —ஆக 24.

பழைய ஏட்டுப் பிரதிகளுள் ஒன்றில், "மாணிக்க வாசகர் பாடல் திருப்பதிக் கொத்து" என்ற தலைப்பில், 15 வரிகள் உடைய ஓர் ஆசிரியப்பா காணப்படுகிறது. இது, "மூவரும் ஓதிய முதுபதி" நீங்கலாக, ஏனையவை இருபது என்று எண்ணிக் கூறுகிறது. இப்பாடல் பின் வருவதாகும்.

வாதவூர் இறைவன் ஓதிய மொழிகளுள்
மூவரும ஓதிய முதுபதி ஒழியத்
தீதிலாப் பதிமற்று யாதென வினவில்
திருப்பெருந் துறையும் திருக்கோ கழியும்
சீர்புகழ் உத்தர கோச மங்கையும்
பட்ட மங்கை பாண்டூர் கூவிளம்

| | | | |
|---|---|---|---|
| நந்தம் | பாடி | நற்கல் | லாடம் |
| வீறும் | ஓரியூர் | வேலம் | புத்தூர் |
| சாந்தம் | புத்தூர் | சந்திர | தீபம் |
| பாலை | பஞ்சப் | பள்ளி | நகரும் |
| மந்திர | மாமலை | மயேந்திர | மலையும் |
| அரிகே | சரியும் | பெரிய | மொக்கணியும் |
| தேவூர்த் | தென்பால் | திகழ்பொரு | தீவும் |
| கவித்தல | முடனே | கருதிய | இருபதும் |
| சிவக்கொழுந் | தகலாத் | தெய்வவுளத் | தலமே. |

(பாடம்: வெல்லம்புத்தூர், பரிசப் பள்ளிநகர், முக்கணி.)

இங்கு இப்பாடலின் ஆசிரியர் திருப்பெருந்துறையும் திருக்கோகழியும் இருதனித் தலங்களாகக் கணக்கிடுகிறார். இவர் கூறுகின்ற கூவிளம், கவித்தலம் என்ற இரண்டும், கீர்த்தித் திருவகவல் கூறும் குவைப் பதியும் கவைத்தலையும் போலும். மந்திர மாமலை, மயேந்திரமலை என்ற இரண்டு மலையைத் தனி இருதலங்களாகக் கணக்கிடுகிறார்.

இப்பாடல் திருவாதவூரைச் சேர்த்து எண்ணவில்லை. வாதவூர் மாணிக்க வாசகரால் ஒரே இடத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. "வாதவூரினில் வந்தினிதருளி பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்" என்பது கீர்த்தித் திருவகவல், வரி 52–53.

பாலை என்பது திருப்பாலைத் துறை என்ற பாடல் பெற்ற தலமாகச் சொல்வது உண்டு. "சந்திர தீபத்துச் சாத்திரனாகி" என்ற தொடரினால் சந்திரதீபம் என்ற ஆகமத்தைக் குறிப்பிட்டதாகக் கொள்வதும் உண்டு. தேவூர் என்ற தலத்தை இவர் திருவாசகத்தில் உள்ளபடியே 'தேவூர் தென்பால் திகழ் பொருதீவு" என்றே கொண்டிருக்கிறார். இது தேவை (தேவூர்) என்று வழங்குகின்ற இராமேசுவரத்திற்குத் தென் கிழக்கில் உள்ள இலங்கைத் தீவைக் குறிக்குமோ என்று ஐயுறுவதற்கு இடமாகும். கீழ் வேளூருக்கு அருகேயுள்ள சுந்தர மூர்த்தி தேவாரம் பெற்ற திருத்தேவூர் என்பதும் வழக்கு.

இடவை என்பது இடவாய் எனவே பலர் பொருள் கொண்டிருக்கிறார்கள். இது கல்வெட்டின் மூலம் சம்பந்தர் பதிகம் கிடைத்துள்ள இடமாகிய திருவிடைவாய்

(இடவை–இடைவாய் – திருவிடைவாய்) ஆகுமோ என்ற ஐயம் எழுவது இயல்பு. கீர்த்தித் திருவகவல் 65 ஆவது வரி குறிப்பிடுகின்ற காடு என்பது தனித்தலமா என்பதும் சிந்தித்தற்குரியது. பூவலம் அவ்விதமே.

இனி பேணு பெருந்துறை, திருவம்மானையில் இருபாடல் களில் (10, 19) குறிப்பிடப்பட்டுள்ளது. முதற் பாடல் "பேணு பெருந்துறையில் – கண்ணூர் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட – அண்ணுமலையானை" என்று வருகின்றது. சிவபெருமான் குருமூர்த்தமாக எழுந்தருளி மாணிக்கவாசகரை ஆட் கொண்டதலம் திருப்பெருந் துறை; எனவே பேணு பெருந்துறை இங்கு பெருந் துறையே என்று கருதுகிறேம். எனினும் தேவாரப்பாடல் பெற்ற பேணு பெருந்துறை என்ற மற்றொருதலம் கும்ப கோணத்தின் அருகில் இருப்பது நமக்கு நினைவிருத்தல் வேண்டும்.

பாவநாசம் என்ற தொடர் மூன்று இடங்களில் பயில் கிறது. "பாவ நாசம் ஆக்கிய பரிசு" என்ற கீர்த்தித் திரு வகவல் வரி 57 பாவத்தை நாசமாக்கிய என்ற பொருள் தருகிறது. "பாவநாசா–உன்பாதமே அல்லால்–பற்றுநான் மற்றிலேன் கண்டாய்" என்பது வாழாப் பத்து 9.ஆம் பாடல். "பாவநாச, நின்சீர்கள் பாடவே" என்பது திருச் சதகம் 99 ஆம் பாடல். சிவபெருமானை இங்கு 'பாவநாசா' என்றபெயரால்விளிக்கிறர். இத்தொடரானதுபாவநாசம் என்ற தலப்பெயரை நினைவூட்டுவதா என்பதும் கருதத் தக்கது. பாவநாசம் என்ற பெயருடன் தமிழ் நாட்டில் இரண்டிடங்கள் உள்ளன. "காரார் கடல்நஞ்சை உண்டு கந்த காபாலி" (பூவல்லி 10) என்ற தொடர் திரு மயிலாப் பூரைச் சுட்டும் என்று கொள்வோரும் உளர்.

மொக்கணி பற்றிய வரலாறு மொக்கணீச்சுரம் என்ற கோயிலால் விளங்கும்; இது கொங்கு நாட்டில் உள்ளது.

திருபெருந்துறை – திருகோகழி பற்றிய குறிப்பு இனித் தனியே எழுதுவோம்.

முற்குறித்த பாடல் கூறும் கூவிளம்,கவித்தலம் என்ற தலக் கருத்துக்கள் புதியன; ஆராய்தற்குரியன.

மூவர் தேவாரப் பதிகம் பெற்ற தலங்கள் 274, தேவார வைப்புத்தலங்கள் 249, ஆகத்தலங்கள் 523 என்று, சென்ற நூற்றுண்டில் அச்சிடப்பெற்ற செந்தில் வேல் முதலியார் அடங்கன் முறைப் பதிப்பிலும் ராம சாமிப் பிள்ளை அடங்கன் முறைப் பதிப்பிலும் கணக்கிடப் பட்டுள்ளன. அப்பதிப்புகளிலேயே திருவாசகத்துத் தலங்கள் 2, திருவாசக வைப்புத் தலங்கள் 12, ஆக 14 என்ற கணக்கும் பின்வருமாறு காணப்படுகிறது:—

திருவாசகத் தலங்கள் 2:

1. திருவுத்தர கோச மங்கை,
2. திருப்பெருந்துறை

திருவாசக வைப்புத் தலங்கள் 12:

| | | | |
|---|---|---|---|
| 1. | கல்லாடம் | 7. | மொக்கணி |
| 2. | பஞ்சப்பள்ளி | 8. | பூவலம் |
| 3. | நந்தம்பாடி | 9. | பட்டமங்கை |
| 4. | வேலம்புத்தூர் | 10. | ஓரியூர் |
| 5. | தர்ப்பணம் | 11. | பாண்டூர் |
| 6. | சாந்தம்புத்தூர் | 12. | மந்திரமாமலை |

இப்பதினான்கினுள், கோகழி (தனி) குவைப்பதி, சந்திர தீபம், பாலை, மயேந்திரமலை, அரிகேசரி, தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவு, கவைத்தலை என்பன சேர்க்கப் பெற வில்லை. பூவலம், தர்ப்பணம் சேர்க்கப் பெற்றுள்ளன. தர்ப்பணம் என்பது கண்ணாடி; ஒரு தலத்தின் பெயர் அன்று.

---

## சித்திரை மாத விசேட தினங்கள்

| | | |
|---|---|---|
| 5 | (17—4—64) | விறன் மிண்ட நாயனார் விழா |
| 9 | (21—4—64) | சிவஞான சுவாமிகள் விழா |
| 12 | (24—4—64) | உமாபதி சிவாச்சாரியார் விழா |
| 14 | (26—4—64) | இசை ஞானியார் விழா |
| 15 | (27—4—64) | திருக்குறிப்புத் தொண்டர் விழா |
| 18 | (30—4—64) | குமரகுருபரர் விழா |
| 24 | (6—5—64) | திருநாவுக்கரசர் விழா |
| 29 | (11—5—64) | சிறுத்தொண்டர் விழா |
| 31 | (13—5—64) | மங்கையர்க்கரசியார் விழா |

# திருமுறைத் தொடர்களின் :: :: பொருள் கோள்

(க. வச்சிரவேல் முதலியார், காஞ்சிபுரம்.)

சைவத்திருமுறைகள் மெய்யுணர்ந்த பெருமக்கள் திருவருள் வயப்பட்டு நின்று அருளிச் செய்தவை; ஆதலால் அவற்றின் உண்மைப் பொருளை உள்ளவாறு உணர்தல் நம்மனோர்க்கு அரிதே. ஆயினும், அவ்வருளாசிரியன்மார் திருக்குறிப்போடு ஒன்றி அவற்றின் பொருளை உணர்ந்தறிய முயலுதல் தவறன்று. உணர்ந்தறியலுறும் போது நம் போக்கும் நோக்கும் வேறுபட நேரின், கொள்ளும் பொருளும் வேறுபடும். இந்நிலையில் சில சொற்றொடர்களின் பொருள் பலதலைப்பட உரைக்கப்பட்டு வருதலின் அவற்றை எடுத்துக் கொண்டு, "பல் பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்" என்னும் உத்திபற்றி என் அறிவிற்கு நல்ல எனத் தோன்றும் பொருளைக் குறிப்பிடுதல் இக்கட்டுரையின் நோக்கம்.

திருநாகைக்காரோணம் பற்றி நம்பி ஆரூரர் பாடியருளிய திருப்பதிகத்தின் இரண்டாம் பாட்டின் முதல் அடி,

"வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத் தீர்த்தீர்;
விருத்தி நானுமை வேண்டத் துருத்திபுக்கங்கிருந்தீர்"

என்னும் வடிவில் அச்சிடப்பட்டு வழங்குகின்றது. அதன் பொருள் "வேம்பு போலவும் இனிமையான கரும்பு போலவும் என்னுடன் கலந்து என்னைத் தூய்மை செய்தீர். விருத்தி – அடிமை" என விளக்கப்படுகின்றது.

இதன் முற்பகுதியைச் சிவஞான சுவாமிகள், தமது மாபாடியத்தில், பசுபுண்ணியம், சிவ புண்ணியம் என்னும் பாகுபாடு நல் வினைகளைச் செய்வோரது கருத்து வகை பற்றியே கொள்ளப்படும் என விளக்கியபின், "வேம்பினொடு தீங்கரும்பு விரவியெனைத்தீற்றி என்றோதிய தூஉம் இவ்வியல்பு நோக்கி யென்க" என எடுத்துக் காட்டியருளுகின்றார்கள். தீர்த்தீர் எனப்பாடங்கொள்ளாது தீற்றி எனப் பாடங் கொண்டமை கருதத்தக்கது. திரு. சதாசிவ செட்டியார் அவர்கள் கொண்டதும் 'தீற்றி' என்னும் பாடமே.

சுவாமிகள் திருவுள்ளக்கிடையை ஒருவாறு உய்த்து உணரின், அவ்வடியின் பொருளைப் பின் வருமாறு கொள்ளுதல் தகும் எனக் கருதுகின்றேன்:—

''பெருமானே, கசப்பான மருந்தோடு சர்க்கரையைக் கலந்து சேய்க்கு ஊட்டி நோய்தீர்க்கும் தாய்போல, பொது நீக்கி நின்னை முழுமுதல் என உணரும் உணர்வோடு நின்னை எனக்குத் தோழன் என உணரும் உணர்வைக் கலந்து நிகழ்வித்துச் சிவபோகத்தை நுகர்விக்கின்றாய்; அங்ஙனம் நுகர்ந்துவரும் அடியேன், என் உடல் வளர்ச்சி கருதி ஊதியத்தை வேண்டவும் அதனை உடனே கொடாமல் துருத்தியிற் சென்று அங்கிருந்தனை'' தீற்றி— உண்பித்து; விருத்தி—சீவித்தற்கு வேண்டிய பொருள், உஞ்சவிருத்தி என்றதிற் போல. 'பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக விளைவித்து நுகர்விக்கும் பெருமான் நீ. அத்தகைய நீ, யான் விருத்தியை வேண்டிக் கேட்கும் போது, வேறிடஞ் சென்று மறைந்து, கொடாமல் இருந்தால் விடுவேனோ!' என்பது கருத்து. துருத்தி – திருத்துருத்தி, குற்றாலம். ஆற்றிடைக் குறையிற் சென்று இன்பமாய் அமர்ந்திருந்தனை என்பது தோன்ற நின்றது.

இனி, 'வேம்பு என்றது உலக வினையை எனவும் தீங்கரும்பு என்றது முதல்வன் அடியை உணரும் உணர்வு எனவும் கொண்டு, உலக வினைகளில் அடியேன் ஈடுபடும் போது அவற்றோடு நின் திருவடியை உணர்ந்து நிற்கும் நிலையினைக் கலந்து உளதாக்கிப் பரபோகத்தை நுகர்வித்தருளி' என்பதும் முதற்பகுதிக்குச் சுவாமிகள் திருவுளங் கொண்ட பொருளாதல் கூடும். அன்பர்கள் மேலும் சிந்திக்க.

இனி, அவர் அருளிய திருவாரூர்த் திருப்பதிகத்தில், ''இறைகளோ டிசைந்த இன்பம் இன்பத்தோடிசைந்த வாழ்வு –பறை கிழித்தனைய போர்வை பற்றியான் நோக்கினேற்கு'' என்பதிலும் ''இறைகளோடு இசைந்த இன்பம்'' என்பதற்கு 'இறைவனோடு கலந்து அனுபவிக்கும் பேரின்பம்' எனப் பொருள் கொள்ளுதல் நல்லதாகத் தோன்றவில்லை. அப்பதிகத்தில் பின்வரும் பாட்டுக்களில் ''ஊன்மிசை உதிரக்குப்பை ஒருபொருளிலாத மாயம் – மான்மறித்தனைய நோக்க மடந்தைமார் மதிக்கும் இந்த – மானுடப்

CONNEMARA PUBLIC LIBRARY

பிறவி வாழ்வு வாழ்வதோர்வாழ்வு வேண்டேன்'' என்றாற் போலப் பொதுவாக வாழும் மனித வாழ்க்கையின் இயல்பையே குறிக்கின்றார் ஆசிரியர். ஆதலால், ''இறைகளோடு இசைந்த இன்பம்'' என்பதற்கு 'அற்பமாய பொருள்களோடு சார்தல் பற்றி உள்ளதாகிய (அற்ப) இன்பம்' எனப் பொருள் கோடலே பொருத்தமாக இருக்கும். இறை – அற்பம்; இறைகள் – அளவாலும் காலத்தாலும் தன்மையாலும் அற்பமாகிய நுகர்ச்சிப் பொருள்கள் ''தினைத்தனை உள்ளதோர் பூவினிற்றேன் உண்ணாதே'' என எழுந்த திருவாசகம் ஒப்பு நோக்கத்தக்கது.

இனித் திருவாசகத்தில் வரும் 'சேர்ந்தறியாக்கையானை' என்பதற்குப் பெரும்பாலோர் ''பிறரை வணங்குதற்பொருட்டுக் கைகளைச் சேர்த்து அறியாத முதல்வனை'' என்றே பொருள் விளக்கம் செய்கின்றனர். இப்பொருளை விழுமிய பொருள் என்று கொள்ள என் உள்ளம் ஒருப்படவில்லை. புராணங்களில் சில இடங்களில் சிவபிரானது விச்சுவ சேவியத்தன்மையை வலியுறுத்த வேண்டிச் சிவபிரானைத் தேவர் முனிவர் முதலாக யாவரும் வழிபட்டுள்ளனர்; அவ்வாறு சிவபிரான் பிறர் யாரையும் அருச்சித்து வழிபட்டதாக வரலாறு இல்லை என வருதல் உண்டு. திருமுறைகளில் ''தொழப்படுந் தேவர் தொழப்படுவானைத் தொழுத பின்னர்த்–தொழப்படுந் தேவர்தம் மாற்றொழு விக்குந்தன் தொண்டரையே'' என்றாற் போல உடன் பாட்டாற் கூறுதலன்றி வேறு வகையாற் கூறுதல் காணப்படவில்லை.

அத்தொடர்,

''செய்யானை வெண்ணீ(று) அணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை எங்குஞ் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்(கு) அல்லாத வேதியனை
ஐயா(று) அமர்ந்தானைப் பாடுதும் காண் அம்மானாய்.''

என்னும் இடத்தில் பொருள் முரண் தொடை அமைய வந்திருத்தல் கருதத்தக்கது.

இடம் அறிந்து உய்த்துணரின், ''சேர்ந்தறியாக் கையானை எங்கும் செறிந்தானை'' —என்பதற்கு ''உலகப் பொருள்களிற் சேர்ந்து அவற்றை அனுபவியாத செய

வினை (இயல்பினை) உடையானை, ஆயினும் எங்கும் நிறைந்து கலந்துள்ளவனை'' எனப்பொருள் கொள்ளுதலே சிறப்பாகும். சேர்ந்து அறிதல்—அது அதுவாய்ச் சார்ந்து அனுபவித்தல், இஃது உயிரின் இயல்பாவதன்றி முதல்வன் இயல்பாகாது. கை – ஒழுக்கம், செயல், இயல்பு "யாவையும் சூனியம் சத்தெதிராகலின்—சத்தே அறியாது" என்னும் சிவஞான போதப் பகுதி ஒப்பு நோக்கத்தக்கது. திருநெல்வேலி கா. சுப்பிரமணியபிள்ளை, M.A., M.L. அவர்கள் இவ்விழுமிய பொருளையே கொண்டுள்ளனர் என்பதை அவரியற்றியுள்ள உரையிற் காண்க.

முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்;
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்;
அத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

என்னும் திருப்பொற் சுண்ணத்தில் சுண்ணம் இடிக்கும் மகளிர்க்குள் ஒருத்தி பிறர் பலரை நோக்கி, 'நீவிர் இன்னதுஇன்னதுசெய்ம்மின்'' எனஏவுவதாகவருதலின்,சத்தி, சோமி, பார்மகள், நாமகள், சித்தி கௌரி, பார்ப்பதி, கங்கை என்பவை உடன் உள்ள மகளிர்தம் இயற்பெயர்களாகக் கூறப்பட்டவை என்பது தெளிவு. இவற்றிற்கு ரௌத்திரி, திருமகள், நிலமகள் என்றாற் போலச் சத்தியின் பல்வேறு அம்சங்களைப் பொருளாகக் கொள்ளுதல் இயைபின்றி விலகிச் சென்று வேண்டாதவற்றைக் கொணர்ந்துரைப்பதாக முடியும்.

இனி, பிரசங்க சங்கதி என்னும் இயைபு பற்றி ஒரு விசித்திர உரையைக் குறிப்பிட விரும்புகிறேன்:

1 பலகலையும் 2 எண்ணரிதும் பார்க்கிலருஞ் 3செறிந்திடுமே
மலநிலையால் வரும் 4 எண்ணே 5 மருவியவும் 6 காட்டிடுமே
சொலவரிதாம் 7 பன்னிறமுந் 8 தன்னறிவும் 9 சொற்புகலும்
பிலமுள 10 பொற் 11 றீங்கண்டம் 12 பேர்முதலாப்
பன்னிரண்டே.

என்னும் பண்டார சாத்திரப்பாட்டு ஸ்ரீ சுவாமிநாத தேசிகர் சிவப்பிரகாசம் பன்னிரண்டு சூத்திரங்களாகப்

பிரிக்கப்படும் முறையைத்திருவிருத்தங்களின் முதற்குறிப் புப் பற்றி வினைவூட்டச் செய்தருளியது. பலகலை எனத் தொடங்கும் திருவிருத்தம் முதலாக முதற் சூத்திரம்; எண்ணரிது முதல் இரண்டாஞ் சூத்திரம்; செறிந்திடு முதல் மூன்றாஞ் சூத்திரம்; எண் முதல் நான்காஞ் சூத்திரம்; மருவிய முதல் ஐந்தாஞ் சூத்திரம்; காட்டிடும் முதல் ஆறாஞ் சூத்திரம்; பன்னிறம் முதல் ஏழாஞ் சூத்திரம்; தன்னறிவு முதல் எட்டாஞ் சூத்திரம்; புகல் முதல் ஒன்பதாஞ் சூத் திரம்; 'பொற்' முதல் பத்தாஞ் சூத்திரம்; தீங்கு முதல் பதினொன்றாஞ் சூத்திரம்; அண்டம் முதல் பன்னிரண்டாஞ் சூத்திரம் —என்பதே பாட்டின் கருத்து. சிவப்பிரகாசப் பதிப்புக்களைப் பார்த்தால் இது விளங்கும். இப்பாட்டிற் கூறியபடி முற்றும் இராமல் இறுதிச் சூத்திரங்கள் ஒவ் வொரு திருவிருத்தம் முன்னே பின்னே அமையப் பிற் காலத்து வகுக்கப்பட்டு வருவதும் விளங்கும்.

இதற்கு "பாசஞானங்களாகிற அறுபத்து நான்கு என்றும், அதற்கு மேற்பட்டு எண்ணற்றனவுமாயும் உள்ள நூல்களைப் பார்க்காதவர்களும், மலமாயாதிகளை அடைந்திருக்கிற நிலைமையால் பொருந்தி வரும் எண் ணங்களையும், அதனால் அவர்கள் சார்ந்திருக்கின்ற அகச் சார்பு புறச் சார்புகளையும் அறியத் துணை செய்துநிற்கும் சொல்லுதற்கு அரியனவாகிற பல நிறங்களையும் ஆன்ம போதமாகிற பசு ஞானத்தையும் மிக ஆழமான பிலத்து வாரத்தில், உள்ளன போல பலவேறு கண்டங்களுடைய நாம ரூபமாதியவற்றைப் பன்னிரண்டாம் சூத்திர அனுப வம் பெற்றவர் தம் முறையாற் புகல்வர் என்றவாறு" என உரை அச்சிடப்பட்டுள்ளது.

"மூன்று நான்கேழு மூன்றே முடிந்தபின் இரண்டிரண்டே
மூன்று நான் மூன்றினன்றாய் முடிந்த பின் இரண்டிரண்டே
ஏன்ற நான் கீறுதாமே இவையீராறிலக்கத்துள்ளே
ஏன்ற முப்பானொன்பானை எனக்கரன் இரங்கினானே."

என்னும் பாட்டுச் சிவஞான போதத்தில் பன்னிரண்டு சூத்திரங்களில் முப்பத்தொன்பது அதிகரணங்களும் முறையே 3, 4 7 3, 2, 2, 3, 4, 3, 2, 2, 4 என அமைந் துள்ளன எனக் குறிப்பிக்க எழுந்ததே. இதற்கும் மேலே காட்டியவாறு விசித்திர உரையும் விசேடக் குறிப்புக் களும் எழுதப்பட்டு வழங்குகின்றன.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

என்னும் பொதுமறை சைவநன் மக்களை விபரீத உரைகளினின்றும் காக்க.

இன்னும், இக்காலத்துச் சிலர் திருமுறைகளுக்கு திவ்விய பிரபந்த வியாக்கியானங்களைப் பார்த்து அவற்றைப் போல எழுதவேண்டும் என்று விரும்புகின்றனர். அங்ஙனமே இயற்ற விரும்புவோர் முதற்கண் பெரிய புராணத்தையும் சிவஞான மாபாடியத்தையும்நன்குகற்றுணர்ந்து பின் இயற்றப் புகுதல் நன்று. இல்லையேல், பிரபந்த வியாக்கியானங்களில் இலக்கியச் சுவைதோன்றவும் கேட்போர் மனக்கற்பனையைப் பிணிக்கவும் எழுதியவற்றை அனுபவங்கள் எனக்கொண்டு திருமுறைகளின் மரபுக்கும் நோக்கிற்கும் திருக்குறிப்பிற்கும் பொருந்தா உரை வகுக்க நேரும். திருவெம்பாவைக்கு இக்காலத்து வழங்கிவரும் உரைகள் இப்பிழையை மேற்கொண்டு வருதல் இதற்குச் சான்று. இதனைச் சமயம் நேரின் விளக்கக் கருதுகிறேன்.

(குறிப்பு:—

திருமுறைகளில் பாடம் தேர்வதிலும் பாடத்திற்குப் பொருள் கொள்வதிலும் ஏற்பட்டுள்ள சில பிழைகளை சித்தாந்தப் பேராசிரியர் மேலே எடுத்துக் காட்டினார். சில, நகையை விளைவிக்கும்தன்மையனவாகவும் உள்ளன. சுந்தரர் தேவாரத்தில் செந்தில் வேல் முதலியார், இராமசாமிப் பிள்ளை போன்ற பல பெரியார்கள் பதிப்புக்களில் தீற்றி என்ற பாடமே காணப்படுகிறது. சமாஜப் பதிப்பில் எவ்வாறோ பிழை புகுந்து விட்டது. தீற்றி என்றால் உண்பித்து என்பது பொருள். "அடித்தடித்து அக்காரம் முன்தீற்றியஅற்புதம் அறியேனே" என்பது திருவாசகம்.

"இறைகள், சேர்ந்தறியாக் கையான்" என்ற சொற்களுக்குக் குறிப்பிட்டுள்ள பொருள்கள் கருதத்தக்கவை; இவைகளே கொள்ளத்தக்கன. சத்தி, சோமி முதலியோர் அவ்வவ்வியற்பெயர் உடைய தோழிமார் என்றே பொருளாகும்.

இனி பலகலை, மூன்று நான்கு என்ற பாடல்களைப் பற்றி ஆசிரியர் எழுதி இருப்பது நகையினை விளைவிக்கும் அல்லவா? வேறு விதத்தில் இப்பிழைகளை நாம் பொறுத்துக் கொள்ளுதல் இயலாது. —ஆசிரியர்.)

சமயப் பகுதி:—

# அருளாசிரியரும் ஆணவநீக்கமும்

—(புலவர். பொன். சண்முகனர், காஞ்சிபுரம்.)—

ஆணவத்தைப் பற்றிய அருளாளர் கருத்துக்களுட் சிற்சில. சித்தாந்தம் மலர் 36, இதழ் 5 இல் வெளிவந்தது.

அக்கட்டுரையைக் கற்பாரெல்லாரும் அதன் பொருளை உணர்தல் அரிதே. ஏன் எனின், ஆணவம் அகல முயல்வார் அனைவரும் ஒரு திறத்தாரல்லர். ஒரு திறத்தாராயின் 'மலபரிபாகம்' என்ற வழக்குண்டாகாது. அருள் பெற முயல்வாரும் அவ்வாறே ஒரு திறத்தாரல்லர். 'சத்திநிபாதம்' ஒரேகாலத்தில் முற்றும்பற்ருது. ஏன்என்ருல் சத்திநிபாதத் திற்குக் காரணம் மலபரிபாகம். அச்சத்திநிபாதம் சோபான (பழ) முறையால் மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிர தரம்என நால்வகைப்பட்டு அவற்றுள்ளும் பலவேறு வகைப்பட்டு நிகழும். அது பராசத்தி ரூபமேயாய் ஆன்மாக்களிடத்திற் பதிவது, அது கருணை எனப்படுவது. அதன் முன் (மலபரி பாகம் எய்தாதபோது) பக்குவம் ஆதற் பொருட்டு மலத் திற்கு அநுகூலமாய் நின்று திரோதான சத்தி நடாத்தியது. மலம் பரிபாகம் எய்தியவழி அச்சத்தி அக்கருணைமறம் ஆகிய செய்கைமாறிக் கருணை யெனப்படும் பராசத்தி ரூபமே யாகின்றது. ஆகவே சத்திநிபாதம் பலவேறு வகைப் படுவது போன்று மலபரிபாகமும் பலவேறு வகைப்பட்டு நிகழ்கின் றது. அந்நிகழ்ச்சிக்கு உட்பட்ட உயிர்களுள் வேறுபாடு இராது போமோ? இருப்பது முறைதானே! அவ்வேறு பாடே, அருளாளர் தெளிவித்த உண்மையிலும் முன்னுக் குப் பின் முரணுகக் கொள்ளற்குக் காரணம் ஆகும்.

சுவாமிகள்கட்டுரையில்உள்ளகருத்துநம் முன்னோருடைய கருத்தே. அக்கருத்துக்கு உற்ற மறுப்பு நம் முன்னோர்கருத் துக்கு உற்ற மறுப்பேயாகும்.

மறுப்புக் கட்டுரையினையும் சுவாமிகள் கட்டுரையினை யும் ஒருங்கு வைத்து நோக்கி ஆராயும்புலவர்க்கு, அம்மறுப்

புக்குத் தக்கவிடை அவர்கள் கட்டுரையில் விளங்குவது உறுதி. முன்னையோர் எல்லாரும் வேறு கருத்து இல்லாத வரே. சுவாமிகள் கட்டுரையில் உள்ள எல்லாம் பழமையவே. நம் முன்னோர் சொன்ன பொருளை நன்குணரும் ஆற்றல் இல்லையேல், குழப்பம் வாராது போமோ? 'நம்மைக் குழப் பம் அடையச் செய்கிறது' என்று (பக்கம் 382) எழுதியவர் தமது மறுப்புக் கட்டுரையில் முதல் இடைகடை மூன்றிடத் துள் எங்கேனும் கட்டுரைக் குறிக்கோட் பொருளை நிறு வினரோ? இல்லையே! தமது கட்டுரையின் முடிவிற் குழப்பம் அன்றி வேறுண்டோ? 'அடிக்குறிப்பு' என்ற தலைப்பில் உள்ளது முழுதும் 'குழப்பம்' பற்றியதே. அதை அவரது கட்டுரை முடிவில் அறிந்து கொள்ளலாம். பல பக்கம் எழுதியும் தம் குழப்பத்தையே முடிவிற் காட்டினர் என்று எவர்தாம் உணரார்? பக்கம் 378—382 இல் உள்ளவற்றை ஊன்றி நோக்கியுணர்வார்க்கு, சுவாமிகளது கட்டுரைப் பொருளை மறுப்புரை யெழுதியவர் செவ்விதின் உணரா தெழுதினர் என்பது விளங்கும். அதற்கோர் எடுத்துக் காட்டு இது:—

"மலம்சாய அமுக்கி" "மும்மலத்தை மோசித்து" "ஆதிமலம் இரண்டும்" சித்தமலம் அற்றார் செறிந்திடுவர்" எனச் சுவாமிகள் தம் கட்டுரையில் நிறைய எடுத்துக்காட்டும் திருவாக்குகள் அனைத்தும் "பாசத் தொடக்கு அறுதலையே" குறிப்பன வாதலால், 'முத்தியில் மும்மலங்களும் உண்டு' என்னும் கருத்துக்கு மாறானவை அல்ல என்றே நாம் கருது கின்றோம் என்று (பக்கம் 47) எழுதினர். இவ்வாக்கியம் எவர்க்குப் பொருந்துவதாகத் தோன்றும். அறுதலைக்குறிக் கும் திருவாக்குக்கள் உண்டு என்பதற்கு மாறானவை அல்ல வாம்என்றால், பின் எப்பொருளது? மோசித்தல், அறுதல், சாய அமுக்குதல் எல்லாம் உண்டு என்னும் பொருள னவோ?

உமாபதி சிவாசாரியாரும் சுவாமிகளும் ஆணவத்தைக் குறித்து 'ஒடுக்கம்' என்று யாண்டும் கூறியருளினர் அல்லர். உமாபதி சிவாசாரியார் கூறியருளும் 'ஒடுக்கம்' என்றும்,

"நீக்கமும் சொல்லி ஒடுக்கமும் சொல்லி முடிவாக முத்தியில் மலத்திற்கு மறைகின்ற ஒருசெயலும் உண்டு என்று சொன்னால், சுவாமிகள் அவர்கள் எக்கருத்தை இங்கு வலியுறுத்துகிறார்கள் என்பது தெரியவில்லை" என்றும் எழுதியது; உணராமையால் வந்த பிழை (பக்கம் 381-46 பார்க்க.)

அருணந்தி சிவாசாரியாரும், உமாபதி சிவாசாரியாரும் அருளியவற்றுள் இரண்டனைக் காட்டி, இருவர் கருத்தும் ஒன்றுக்கொன்று முரண்படுவது போல இருப்பதால், சிக்கறுத்துத் தெளிவு காணவேண்டும்" என்று எழுதினார். (பக்கம் 382) முரணானது என்று பொ. மு. பிள்ளை விளக்கிய தறிக.

சுவாமிகள் கட்டுரைச் சொல்லாக மறுப்புரையிற் காட்டிய நீக்கமும் மறைப்பும் அவ்வமைவுரையிலும் இருத்தலைக் காணலாம்.

புகழுடல் எய்திய பொ. முத்தைய பிள்ளை எழுதியன வாக மறுப்புக் கட்டுரையில் காட்டித் தம்கருத்துக்கு இயைபு கொண்டார். (பக்கம் 383-46) அவர் 'சித்தாந்தம்'தொகுதி க. பகுதி 5 + 6இல் "கடவுள் + ஆன்மாக்கலப்பிற்கு மலநீக்கமே ஏது ஆகலின் மூன்று எனச் சித்தாந்தம் கூறுதலின் முரணின்மை அறிக" "சிவானந்தத்தை விளைவித்தல் மலம் என்றுகாணப்படவும் மலநீக்கம் ஏதுவாம் என்ற சிவாநந்த விளைவு (துன்பமின்மை) மலமின்மையின் விளைவு. அதனால் மலமின்மை ஏது" என்றெழுதினார். அஃது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த உண்மையே. மேலும் அவர் சருவ ஞானோத்தராகமத்தின் உரையில் (பக்கம் 58-64) விரித்தெழுதியதை நோக்கியிருப்பாரேல், அவருரைதம் துகருத்துக்கு ஒவ்வாது என்று உணர்தல் கூடும். அதில் உள்ளவை இவை:—

1. மலம் நீங்கிய விடத்துத் தன்னோடு பிரிப்பின்றி நிற்கும் சிவத்தின் தன்மை விளங்கித் தோன்ற அதுவாய் நிற்கும் என்பதே பொருத்தம் உடைத்து என்பது உய்த்துணர்ந்து கொள்க" என்றும், 2. "இச்சை விளைத்தல் மலம்' எனவும் அச்சுருதி கூறுதலின், முத்தியில் மலமும்

உண்டுஎன்று கொள்ளவருமே? வரின், மலத்தால் ஆகிய சம் சாரசாகரத்தைக் கடப்பன் என்றது எவ்வாறு பொருந்தும் எனின், மலநீக்கம் ஏதுவாகச் சிவத்தன்மை விளங்கித் தோன்றும் என்பது பற்றி இத்தை விளைவித்தல் மலம் என்றார் ஆதலின் பொருந்தும் என்க. இவ்வுண்மையினையும் உற்று நோக்காது, அவ்வாசிரியரே (மனவாசகங்கடந்தாரே) மேல், "முத்திதனில்—சித்தமலம் அற்றார் செறிந்திடுவர் என்று மறை சத்தியமாவோதியிடும் என்றருளியிருத்தலை யும் நோக்காது முத்தியிலும் மலம் உண்டு போலும் என மயங்கியிடர்ப்படுவர்."

(3) "முத்தியில் மலம் அறவே நீங்கும், நீங்கினும் ஏனைப் பெத்தரிடத்திருத்தலால் நித்தத்திற்கு இழுக்கு இல்லை. இதனை "நெல்லினுக்குத் தவிடுமிகள்...நாசமும் இன்றாமே" என்னும் சிவஞான சித்தியாரானும் "ஏக னாகி...வல்வினை யின்றே" என்னும் சிவஞான போதத்தா னும் தெளிக. அங்ஙனம் ஆயின், "அழிந்திடும் பாசம் என் னில்...இருளும் நாசம் அடைந்திடா மிடைந்திடாவே" என்னும் சிவப்பிரகாசக் கருத்தோடு முரணுகோ எனின் முரணாது. என்னை! சிவனோடு பிரிப்பின்றி நிற்கும் உயிர் களை மறைக்கும் மலத்தின் சத்தி, சிவனை மறையாத வாறு போல, சிவமேயாய் நிற்கும் உயிர்களை மறை யாமையின் சத்தியழிந்திடும் என்றும், சிவனுள் வியாப்பியமாயிருந்து சிவனை யுணராத உயிர்களை மறைத்து நிற்றலின் "நித்தம் அழிந்திடா" என்றும் கூறினமையால் என்க.

(4) "இன்மை முகத்தான் இன்பம் விளையும் எனக் கூறவேண்டி இத்தை விளைவித்தல் மலம் என்றார் என்று ணர்ந்து கொள்க"

(5) "சூலைநோய் காரணமாகச் சிவபிரானை அடைய, அடைந்ததனால் சூலைநோய் நீங்கிச் சிவாநந்தம் பெற்ற மையின், சிவாநந்தாநுபவகாலத்தும் சூலைநோய் சத்தி கெட்டிருந்த தென்று கொள்ளுதல் கூடாதவாறு போல,

முத்தி பெற்ற உயிரினிடத்துமலம் சத்திகெட்டு இருக்கும் என்று கொள்ளுதல் கூடாது.'' என்பதாம்''

(6) "மலம் நீங்கிய விடத்துத் தன்னோடு பிரிப் பின்றி நிற்கும் சிவம் விளங்கித் தோன்றுதலால் அச்சிவமாய் நிற்றல் சிவஞானம் எனப்படும்.''

(7) "மாயாகாரியம் நீங்குதலும் மலம் நீங்குதலும் முறையே பசு ஞானத்திற்கும் ஆன்மஞானத்திற்கும் வேற்றுமை''

மறுப்புக் கட்டுரையாளர்க்கு, இப்படி, பொ. முத்தைய பிள்ளை எழுதியவை நல்ல விளக்கம் செய்யும் என்று கொள் ளல் கூடும்.

அடுத்த கட்டுரையில் மெய்கண்ட நூல்களின் சான்று களைக் காட்டி, முத்தியில் ஆணவமலம் உயிர்களைப் பற்றி யிராமை நிறுவப்படும். நித்தியாநுட்டானமும் சிவபூசை யும் உடையவர்க்கு என்றாலும் இதனை உணரத் துணையாதல் வேண்டா. அவை இல்லாதார் எத்தனை பிறவி யெடுப் பினும், முப்பொருளின் நித்தம் சித்தம் வரப்பெறார். அநுட்டானத்தில் நாள்தோறும் மும்மலமும் நீக்கப்படும் செயல் முறையுள் திருநீறணிதல் ஆணவமலநீக்கத்திற்கே.

காட்சியளவைக்கு நிகராக உள்ள தொருசான்று காட்டி, 'முத்தியிலும் மூன்று முதலும்' என்றதை விளக்கு வோம் :—

(க) திருக்கோயிலுள் திருமூலத்தானத்திலே சிவ மாகிய பதியுளது. (உ) அச்சிவசந்நிதியிலே [பாசமும் பசுத்துவமும் நீங்கியும பதித்துவம் ஓங்கியும் பசு என்ற பெயர் நீங்கியும் ஆன்மா என்ற பெயர் அடைந்தும் பேரின் பம் ஒன்றே பெறறுத் திளைக்கும்] நந்தியுளது. (ந) அந் நந்திக்குப் பின்னர், அவ்வான்மாவைப் பற்றியிருந்து நீங்கிய தும் முத்திபெற்ற ஆதனைப் பசுவாக்கும் சத்தி கெட்டதும் ஏனைப் பெத்தர்பால் உள்ளதும் ஆகிய (பலி பீடமாக இருக் கும்) பாசம் அமைந்திருக்கின்றது. இது முப்பொருளும் நித்திய மாதலை உணர்த்தும் நிலை. இவ்வுண்மையால் உணாக்

கிடக்கும் வாய்மை, முத்தியிலும் மூன்று முதலும் நித்திய மாதலை நிதரிசனமாகக் காட்டும் மெய்ம்மையாகும். திருக்கோயில் முழுதும் திருவருள் வெளியே. அத்திருவருளை வடிவாகக் கொண்ட சிவமே, திருக்கோயிலுள் திருமூலத்தானத்தில் சிவலிங்கப் பெருமான்களிடத்தில், வழிபட்டு வரும் மெய்யன்பர்க்குச் சாந்நித்தியமாகும் பதி. அச்சிவத்தையே நோக்கியிருந்து சிவாநுபவமே எய்தும் ஆன்மா (முன்னைய) பசு. அப்பசுவைப் பெத்தகாலத்துப் பற்றி முத்திகாலத்து நீங்கியதே பலிபீடம் என இருக்கும் பாசம். அங்கின் கெனுதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த நிறைவே திருக்கோயில் முழுதும். அப்பூரணாநந்தமே சிவலிங்கப் பெருமான் கண் நின்ற நளும் சிவம். அச்சிவமாகிய பூரணாநந்தத்தை நுகர்ந்து பிறிதுயாதும் இன்றியிருக்கும் நிலையே நந்தியின் நோக்கம். அதனைச் சாரமாட்டாது நீங்கிய மலத்தின் நிலையே பலிபீடத்தின் வைப்பு.

இதையே திருவருளில் அடங்கியது என்று கூறினர் அருட்சான்றோர் பலரும். திருமூலநாயனார் அருளிய

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்க்கே"

என்னும் திருமந்திரத்தை யுற்று நோக்கின் இவ்வுண்மை தெளிவுறும். அடுத்த திருமந்திரத்திலே,

'பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமும் காட்டி
மதிதந்த ஆநந்த மாநந்தி காணும்
துதிதந்து வைத்தனன் சுத்தசைவத்திலே'

என்று 'பாச நீக்கம்' உணர்த்தியதையும் காண்க.

"அநாதி சீவன் ஐம்மலம் அற்று அப்பாலாய்
அநாதி யடக்கித் தனைக்கண்டு அரனைத்

தஞ்ஞதி மலம்கெடத் தத்துவா தீதம்
விஞ்ஞவுநீர் பாலாதல் வேதாந்த உண்மையே"

என்றதில், மலம் கெடுதலையும் அஃது உபநிடதத்தின் உண்மையாதலையும் அறிக. வேதாந்தம்-உபநிடதம். இதனைச் 'சிவமாதல் வேதாந்த சித்தாந்தம் ஆகும்' என்றதாலுணர்க. உபநிடதத்தின் முடிபு என்பது பொருள்.

முத்தி பெற்ற உயிர்களிடத்திலேயே மலம் (பாசம்) இருக்கும் எனில், அது முத்தியாகாது. ஆனல், அம் முத்தி உலகிற் பலதிறத்தால் எய்தும் முத்தியே.

(1) சிவம் சூரியனைப் போலும் (2) சீவன் கண்ணை ஒக்கும். (3) சிவசத்தி சூரியப்பிரகாசத்தை நிகரும். (4) மலம் இருளைப் புரையும். (5) கண்பற்றும். இருள் கதிரொளியால் நீங்கிக் கதிரோன் எதிரே நிற்கில் கண்ணுங் கதிரோனாகும். அக்காலத்தில் பேரிருளும் பேரா இருளாய்க் கதிரோன் ஒளியுள் அடங்கி அவ்வொளிமயமாய் விடும். விடினும் கதிரோனெதிரே நில்லாத கண்களைப் பற்றி நிற்கும்.

சிவத்தைப் பெற்ற ஆன்மாவின் நீங்கிய மலம் சிவத்தைப் பெறுத பசுக்களிடத்தில் இருக்கும் உண்மையை இதனால் உணரலாம்.

இதனை 'உபதேச விளக்கம்' என்னும் அருணூலில் உள்ள,

"சூரியன் சிவன்; கண்சீவன்; சுடரொளி அருள் மலம்தான்
கூரிருள் ஆகும்; கண்தான் கொள்இருள் ஒளியால் நீங்கிச்
சூரியன் ஒளிநேர் நிற்கில், சூரியனும், அக்காலைப்
பேரிருள் ஒளியாய் நித்யம் பெறும் திரிபொருள்
முத்திப்பால்."

என்ற இத்திருவிருத்தத்தில், 'முத்தியிலும் மூன்றுண் முதலும்' என்றதன் உண்மையைத் 'திரிபொருள் முத்திப்பால்' என்றும், பதி பசு பாசம் மூன்றும் அநாதி நித்தியம் என்னும் சைவ சித்தாந்தத்தை 'நித்யம் பெறும்' என்றும் குறித்தவாறுணர்க.

# திருவாசகம் பேசும் திருத்தொண்டர்கள்

வித்துவான் சுவர்ண காளீச்சுரன்,
திருவையாறு.

சிவராஜயோகத் தவராஜராய்த் தலைமை வகித்தருளும் அருட்டிரு. அடிகளார் அவர்களே! சைவ சித்தாந்தத் தேனமுதருந்தித் திளைக்கும் சிவநேயச் செல்வர்களே! சைவ இளைஞர் பெருமக்களே! தாய்மார்களே! உங்களனைவருக்கும் எனது அன்புகனிந்த கைகூப்பு உரியதாகுக.

இன்றைய மகாநாடு இளைஞர் மகாநாடு. எத்தகைய இளைஞர் மகாநாடு, சைவ இளைஞர் மகாநாடு. சைவம் என்ற சொல்லுக்குச் சிவசம்பந்தம் என்பதுபொருளாகும். "சைவம் சிவத்தொடு சம்பந்தமென்றான், சைவம் வளர்க்கும் சம்பந்த மூர்த்தி" ஆகவே சிவபெருமானிடத்திலே அப்பெருமான் காட்டிய நெறியிலே தொடர்புடைய இளைஞர் மகாநாடு ஆகும் இது. மேலும் அத்தகைய சிவமும் அன்பும் வேறல்ல. ஆகையால் அன்பே சிவமாவது என ஆணையிட்டருளினார்கள். அன்பென்பது தொடர்புடையாரிடத்தே உண்டாகுவது. ஆனால் ஏனைய உலகியல் தொடர்புகள் நீடித்ததாக அமையாது. மணிக்கணக்கிலே நாட்கணக்கிலே ஆண்டுக் கணக்கிலே அமைவது. இத்தொடர்புக்கெல்லாம் ஒரு முடிவு உண்டு. இறவாத அன்பு நாயக நாயகிபாவ அன்பு. இவ்வன்பிலும் நமது ஆன்ம நாயகனாகிய சிவபெருமானிடத்திலே காட்டியருளுகிற அன்பு என்றும் இறவாத பேரன்பாகும். அப்பேரன்பின் வடிவாய்த் திகழ்ந்த பெருமான் நமது மணிவாசகப் பெருமானாவார். இதனை நோக்குங்கால் நமது சைவ இளைஞர் மகாநாடு அப்பெருமான் திருப்பெயர்தாங்கிய பெரியாரது தலைமையில், அப்பெருமான் பிறந்தருளிய நாட்டின் பெயரை முன்னர்த்தாங்கியுள்ள பாண்டிச்சேரியிலே கூடுவது மிகவும் பொருத்தம் என்பதை உணரலாம்.

இனி இத்தகைய மகாநாட்டில் ஒன்றுக்கும் பற்ருத எளியேனை முதன் முதலாகப் பேசச் செய்தார்களே! அதன் உள்நோக்கத்தை ஆராய்ந்த பொழுது, என்னுடைய உள்ளம் அடைந்த இன்பத்தை எடுத்துச் சொல்ல இயலாது அன்பர்களே!

திருத்தொண்டர்கள் வரலாறுகளிலே, நம்மையாள் சிவபெருமான் இளமைக் கோலத்தோடு காட்சியளித்த நிலை ஒரே இடத்தில் தான் பேசப் படுகிறது. நமது சுந்தரப் பெருந்தகையாரும், சேரமான் பெருமாள் நாயனுரும், இராமேஸ்வர யாத்திரை செய்து, திருச் சுழியல் என்னும் திருத்தலத்தில் தங்கியருளுங்கால்,நள்ளிரவில்கனவினிடத்தில் திருக்கானப் பேரூர் என்னும் தலத்திலுள்ள இறைவன், இளமைக் கோலத்தோடு தோன்றி, செங்கையினில் பொற்செண்டு கொண்டு, "நாமிருப்பது காணப்பேரூர் மறந்தனையோ" என அருளி மறைந்தருளினுர்.

இதனைக் குறிக்கும் சேக்கிழார் பெருமான்,

"...............காளையாம் திருவடிவால்
செங்கையினில் பொற் செண்டும் திருமுடியிற் சுழியமுடன்
எங்குமிலாத் திருவேடம் என்புருக முன்காட்டி."

என அருளிச் செய்தார்.

சுந்தரப் பெருந்தகையாருக்குப் பெருமான் மற்றை எல்லாச் சமயத்தும் கிழவடிவோடேயே காட்சியளித்த படியால், இவ்வேடத்தை எங்குமிலாத் திருவேடம் என்றருளிச் செய்தார். இத்தகைய இளமைக் கோலங் காட்டிய பெருமான் வீற்றிருந்தருளும் இடம் "காளையார் கோவில்" எனவழங்கும் திருத்தலமாகும். அத்தலத்தில் பிறந்து அப் பெருமான் பெயரைப் பெற்றிருக்கும் ஒரே காரணம் பற்றியே சமாஜத்தினர் என்னை முதலில் பேசச் செய்தார்கள் என்பதை உணர்கின்றேன்.

இனி இத்தகைய மகாநாட்டில் பேசப்படும் பொருள் இளமை வாய்ந்தாரது பெருமைக்குரியதாக இருக்கவேண்டும். அவர்கள் என்றும் இளையானுகிய முருகப்பெருமானது திருவருளோடும் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும். மேலும் சிவபிரானிடத்து அன்புடையவர்களாகத் திகழவேண்டும் இளமைக்குரிய திண்மை முதலியனவும் உடையவர்களாக இருக்கவேண்டும். இத்தகை

யோர், மணிவாசகப் பெருந்தகையாரால் பாராட்டப் பட்டவராகவும் இருத்தல் வேண்டுமென்றுகருதியே, திருவாசகம் பேசும் திருத்தொண்டர்கள் என்னும் தலைப்பீந்தேன். மணிவாசகப் பெருமான் தனது திருவாசகத்தில் இரண்டு திருத்தொண்டர்களை எடுத்துக் காட்டுகிறார். அவற்றுள் முதல்வர் அன்பின் திருவாகிய கண்ணப்பர். மணிவாசகப் பெருமான், "இறைவா! கண்ணப்பரது அன்பை நோக்க எனது அன்பு குறைந்தது. ஆனாலும் என்னையும் ஒரு பொருட் படுத்தி ஆட்கொண்டாயே! அதுவும் உன்றன் கருணைப் பெருக்கல்லவா?" எனப் பாராட்டுகின்றார்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணை
சுண்ணப்பொன் னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ."

இதனைத் திருக்களிற்றுப்படியார் ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்ப னொப்பதோர் அன்பதனை—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்று
யாமறியும் அன்பன்று அது."

ஆகையால்தான் மானிடர்களெல்லாம் வீண்பொழுது போக்குகின்றார்களே என்றும், கண்ணப்பரின் கதையைக் கேட்கவில்லையே என்றும் வருந்துகின்றார் நக்கீரர் பெருந்தகை.

"வாளா பொழுது கழிக்கின்றார் மானுடவர்
கேளார்கொல் அந்தோ கிறிப்பட்டார் கீழாடை
வண்ணருக் கணுக்கராய் காளத்தி முன்னின்ற
கண்ணப்ப ராவார் கதை."

பொத்தப்பி நாட்டிலே வேட அரசனாகிய நாகனுக்கும் தத்தைக்கும் நீண்ட நாள் புத்திரப் பேறு இல்லாமல், பின்பு தங்கள் குலதெய்வமாகிய முருகனை வழிபட்டு அப்பெருமான் அருளாலே ஒரு நற்குழந்தையைப் பெற்றார்கள். அக்குழந்தையைத் தூக்கும் போது திண்மையாக இருந்த காரணத்தால் திண்ணனார் என்று எல்லோரும் அழைத்தனர். உடம்புத்திண்மையோடு உள்ளத்திண்மையும் உடையவராய், சிங்க முதலியவற்றோடும் விளையாடி நன்முறையில் வளர்ந்து, தான் அரசபாரத்தை ஏற்றுக்

கொள்ளும் வயதை அடைந்தார் திண்ணனூர். அத்தகைய இளமைப் பருவத்தில் கன்னி வேட்டையாடுதற்காக நாகன், காடன் இருவரையும் துணையாக ஏற்று வேட்டையாடி, முடியும் சமயத்தில் ஒருகாட்டுப் பன்றியை விரட்டி நாகனும் காடனும்மட்டும் உடன்வர ஓடி, பன்றியைக் கொன்று அம்மாமிசத்தை உண்ணத் தண்ணீர் வேண்டி, பொன்முகலியாற்றை அடைந்தபொழுது, திருக்காளத்தி மலையினுச்சிதென்பட இதனைக்கண்டதோழன், இம்மலையில் குடுமித்தேவர் இருக்கிறார் கும்பிடலாம் என்று கூறிய மாத்திரத்தே திண்ணனூருக்கு உடற்பாரம் குறைந்தது போன்ற உணர்ச்சி நிலை ஏற்பட்டது. பின்பு "பேணுதத் துவங்களென்னும் பெருகு சோபானத்தை"க் கடப்பார் போல, மலைப்படி கடந்து காளத்தியப்பரைக்கண்ட போது தன்னை மறந்தார் திண்ணனூர். அப்பொழுது நண்பன் இங்கு முன்பு உன் தந்தையோடு வந்திருக்கிறேன். அப்பொழுது ஒருவர் வந்தார். இருக்கின்ற பூக்களை எல்லாம் களைந்தார். ஏதோ முனகிக் கொண்டு புதுப்பூ வைத்தார். ஏதோ கொண்டு வந்து காட்டினார் என்று சொன்னான். இந்த நிலையில் தன்னை மறந்த கன்றைக் கண்ட பசுவைப் போல உளம் நெகிழ்ந்து சிவலிங்கத்தைக் கட்டியணைத்தார். தழுவினார்; உச்சிமோந்தார். இங்கே மணிவாசகப் பெருமான் திருவாக்கு நினைவுக்கு வருகிறது.

"கையால் தொழுதுன் கழற்சே வடிகள்,
[கழுமத் தழுவிக் கொண்டு
எய்யா தென்றன் தலைமேல் வைத்து
[எம்பெருமான் என்று என்றே
ஐயா என்றன் வாயா லரற்றி அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே."

மணிவாசகர் ஆசைப்பட்டார். கழுமத் தழுவிக் கொண்டார் திண்ணனூர். பின்பு இறையவருக்கு அமுது படைக்க எண்ணிப் பிரியா மனத்தோடு பிரிந்து பொன்முகலியாற்றை அடைந்தார். அந்நிலையில் கூடவந்ததோழர்களையும் சுற்றத்தையும் மறந்தார்.

"உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன்
—பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்

குற்ருலத் தமர்ந்துறையும் கூத்தா நின் குரைகழற்கால்
கற்ருவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.

என்ற திருவாசகத்திற்கு இலக்கியமானுர் திண்ணப்பர். உடன் வந்தோர் தாய்தந்தையர்களுக்குத் தெரிவித்து அவர்களும் வந்துபார்த்து பையனுக்குப் பித்துப் பிடித்து விட்டது என்று எண்ணி வருந்தித் தன் இல்லம் சென்ருர்கள். இந்நிகழ்ச்சியானது,

"உத்தம னத்தன் உடையான் அடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட ஊர்ஊர் திரிந்து எவரும்
தத்த மனத்தன பேசஎஞ் ஞான்றுகொல் சாவதுவே."

என்னும் திருவாசகத்தை நினைவூட்டுகிறது. பின்பு பன்றி மாமிசத்தைச் சுட்டுவாட்டிப்பற்களால்அதுக்கி அதுக்கிப் பார்த்து நல்ல சுவையுள்ள ஊனைத் தேக்கிலையிலே வைத்துப் பூவைத் தலையில் சூடி வாயிலே நீரை நிறைய வைத்துக் கொண்டு (இதனை ஞானசம்பந்தர் பெருமான் 'வாய் கலசமாக'என அருளிச் செய்தார்) செருப்புக் காலோடு வில்லை ஒரு கையிலேந்தி காளத்தியப்பரை யடைந்து செருப்புக்காலால் பழைய பூக்களைக் களைந்து வாய்நீரை உமிழ்ந்து அபிடேகித்து தான் தலையிலே சூடிய பூவைச் சாத்தி மாமிசத்தை வைத்து நிவேதித்தார். இதனைக் காளத்தியார் விருப்புடன் ஏற்று மகிழ்ந்தார்.

இதனை நமது மணிவாசகப் பெருமான்,

"பொருட் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
செருப் புற்ற சீரடி வாய்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனுர் சேடறிய மெய்குளிர்ந்தங்கு
அருட் பெற்று நின்றவா தோணேக்கம் ஆடாமோ."

எனப் பாராட்டுவார். சிவானந்தலஹரியில், ஆதிசங்கரர் இக்கருத்தினை அமைத்துச் சுலோகம் செய்திருக்கிருர். இவ்வாறு பூஜித்து இரவு முழுதும் காத்திருந்து, மறுநாள் முன்புபோல பூஜைக்கு ஆவன கொணரச் செல்லுங்கால் சிவகோசரியார் என்னும் சிவாச்சாரியார் மாமிசம் முதலிய சிதறி இருப்பதைக் கண்டுவருந்திப்புண்ணியாவசனம்

செய்து சிவாகம முறைப்படி சிவார்ச்சனை செய்து திரும்புவார்.

இதனைத் திருஞான சம்பந்தர்,

"ஊனெடுண்டல் நன்றெனு ஊனெடுண்டல் தீதெனு
ஆன தொண்டர் அன்பினல் பேசநின்ற தன்மையான்."

என அருளிச் செய்தார்.

இவ்வாறு ஐந்துநாட்கழிந்து ஆரும் நாள் சிவகோசரியார் மிகவும் வருந்த, அவருக்குக் கண்ணப்பரன் பிணைப்புலப்படுத்தக் கண்களில் இரத்தம் வரச்செய்ய, அதுகண்ட கண்ணப்பர், பலபச்சிலைகளை இட்டும் தீராமல் ஊனுக்கு ஊனிடல் வேண்டும் என்பது நினைவுக்கு வர தமது கண்ணினை இடந்து அப்ப, கண்ணில் உதிரம் வடிதல் நின்றது கண்டு மகிழும் போது மற்றெரு கண்ணிலும் உதிரம்வரத் தொடங்க மறு கண்ணையும் தோண்டுதற்கு யத்தனித்து அடையாளம் தெரிவதற்காகச் செருப்புக்காலை உதிரம் வரும் கண்ணின் பக்கத்தே வைத்துத் தோண்டப்புகும் போது காளத்தியப்பர் தனது திருக்கரத்தால் தடுத்து "நில்லுகண்ணப்ப நில்லு கண்ணப்ப"என அருளிச் செய்து தன்பக்கத்தே இருந்தருளும் பெரும்பேற்றைத் தந்தருளினர். இதனைப் பட்டினத்துப் பிள்ளையார் "தொண்டு செய்து நாள் ஆறில் கண்ணிடந்து அப்பவல்லேன் அல்லன்" என அருளிச் செய்தார்.

இனி மணிவாசகம் பேசும் திருவாசகத்தில் பேசப்படும் தொண்டர் சண்டேசுரராவார். இவர் முருகப் பெருமானல் தோற்றுவிக்கப்பட்ட திருச்சேய்ஞலூரிலே அந்தணர் குலத்திலே எச்சதத்தர் பவுத்திரையாகிய இருவருக்கும் புத்திரராகப் பிறந்தருளினர். விசாரசருமர் எனப் பெயர் பெற்ருர். இவர் இளமைக் காலத்தில் தனது மரபுக்கேற்ப வேத அத்தியயனம் செய்து வருங்கால் மாலைக்காலத்தில் பசுமேய்ப்போர் ஒருபசுவைத் துன்புறுத்துவதையறிந்துதானே பசுமேய்ப்பதை ஏற்றுக் கொண்டு, மண்ணியாற்றிலே மேய்த்து வருங்கால், வளத்தால் பசுக்கள் பாலைச் சிந்த அப்பொழுது விசாரசருமருக்குச் சிவபூசை நினைவுக்கு வர, அங்கேயே தான் படித்த மறையுணர்ச்சியினுல் மணலால் சிவாலயம்

அமைத்து, சிவலிங்கம் அமைத்து, மட்கலசம் கொணர்ந்து, பாலைக்கறந்து ஆட்டி வழிபட்டார்.

இதனைக்கண்டோர் பால் வீணாகிறது என்று குறை கூற இதனையறிவதற்காக வந்த எச்சதத்தர் மறைந்திருந்து இதனைக் கண்டு, கோபத்தால் திட்டியும் அடித்தும் கூட விசாரசருமர் தன்னிலை மறந்திருக்க, உடனே கோபித்து பால்வைத்திருந்த கலசத்தைக் காலால் சிதைத்தார். உடனே விசாரசருமர் அருகிருந்த தருப்பையை, தனது பிதாவின் காலிலே போட, அது மழுவாகிப் பிதாவின் காலைச் சிதைத்தது. அதனையும் அறியாமல் பூசனை புரியும் விசாரசருமரது பக்தித்திறத்தைக் கண்டு இடபாரூடராகப் பெருமான் காட்சியளித்தார். சண்டேசுர பதமும் தந்தார். இதனை நமது மணிவாசகம் பேசும் திருவாசகம் பின்வருமாறு கூறுகிறது.

"தீதில்லை மாணிச் சிவகருமம் சிதைத்தானை
சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும்
சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்."

இனி இத்திருத்தொண்டர்களின் வாழ்வில் ஒற்றுமைகளைக் காண்போம். திண்ணனார் முருகனருளாலேதோன்றியவர். விசாரசருமர் முருகப் பெருமான் அருள் நிலவி இருக்கும் அப்பெருமான் திருத்தலமாகிய திருச்சேய்ஞலூரில் பிறந்தருளினார். திண்ணனார் பொன்முகலியாற்றங் கரையில் திருக்காளத்தி மலையுச்சியினைக் கண்டு மகிழ்ந்த சமயத்தில் சிவலிங்க பக்தி உண்டாயிற்று. அவ்வாறே விசாரசருமருக்கும் மண்ணியாற்றங்கரையில் பசுக்கள் பாலைச்சுரந்த நிகழ்ச்சியானது சிவலிங்கபக்தி தோன்றுவதற்குக் காரணமாயிற்று. சிவலிங்கபக்தியில் ஈடுபட்டதிண்ணனாருக்குத் தனது தாய் தந்தை முதலியோர் வந்த நிகழ்ச்சி எதுவும் தெரியாது. தந்தையையும் மறந்தார். அவ்வாறே விசார சருமரும் சிவலிங்க பூஜையில் தந்தைவருவதும் அறியாமல் அவர் திட்டியதும் அறியாமல் தன்னை மறந்தார். சிவபிரானுக்குத் தீங்கு வந்தது என்றபொழுது தன்கண்ணையும் அப்பினார் கண்ணப்பர். சிவ பூசைக்குரிய பொருளை அவமதித்தது தனது தந்தையின் காலேயாயினும் அதனைச் சிதைத்தார் விசாரசருமர்.

இறைவர் காளத்தி வருவோர் கும்பிட்ட பயன் காண என் பக்கத்தே அமர்வாயாக என்று அருளிச் செய்தார் கண்ணப்பருக்கு. இவ்வாறேவிசார சருமருக்கும் என்பக்கத்தே அமர்ந்து எனக்குச் சாத்தும் மாலையும் அமுதும் பெற்று கும்பிட்டபயனைத் தருக என்று இறைவன் சண்டேசுரபதம் தந்தருளினர்.

இவ்வாறு ஓத்த நிலையில் வாழ்வமைந்த இருதொண்டர்களைப் பேசுகிறது திருவாசகம். ஆனால்இருவருக்கும்சமமாக ஒவ்வொருபாடல் அருளிச் செய்யாமல் கண்ணப்பருக்கு இரண்டு பாடலும், சண்டேசுரருக்கு ஒரு பாடலும் அமைத்த நிலையை நோக்கும் போது என் உள்ளத்தில் தோன்றும் கருத்தைச் சொல்லலாமென எண்ணுகின்றேன்.

சண்டேசுரர் நல்லமருத நிலத்திலே உயர்ந்த பண்பாடுநிறைந்த மறையவர் குலத்திலே தோன்றியவர். கண்ணப்பரோ அன்புக்குமாறுபட்ட வன்மையே தனது குலத்தொழிலாகக் கொண்ட வேட்டுவ மரபிலே நாகரீகம் அறியாத மலைப்பகுதியிலே ஓருசிற்றூரிலே தோன்றியவர்.

சண்டேசுரர் இறையுணர்ச்சி வருதற்கும் அப்பெருமான் கருணையைப் பெறுவதற்கும் ஏதுவாகிய வேத அத்தியயனம் செய்தவர். கண்ணப்பரோ வேடர்களுக்குரிய வில், வாள் வித்தை முதலியவன்றி மற்றொன்றும் அறியாதவர்.

சண்டேசுரர் மறையுணர்ந்து அதன் பயனாகிய பசு வேட்டல்முதலிய பதிபுண்ணியத்தைச்செய்பவரானதாலே பாலைக் கண்டவுடன் அவருக்கு சிவலிங்க வழிபாட்டின் நினைவுவந்தது. ஆனால் அத்தகைய சூழ்நிலை ஒரு சிறிதேனும் அறியாதவர் கண்ணப்பர். மேலும் அன்புடையார் என்பதைப் பிறருக்கு அறிவிப்பது கண்களேயாகும். இத்தகைய கண்களையே ஈந்த அன்பு கண்ணப்பரன்பாகும். இதனாலேயே நமது மணிவாசகப் பெருந்தகை "கண்ணப்பனொப்ப தோர் அன்பின்மை" என எடுத்துப் போற்றியருளினர்.

ஆகையால் சைவ இளைஞர்களாகிய நாம் திண்ணனார் போன்று உடலுறுதி படைத்தவர்களாகவும் திகழ

வேண்டும். அன்பு நெறியில் திளைப்பவர்களாக வாழ வேண்டும். நாம் எந்தச் சூழலில் பிறந்து வளர்ந்தாலும் அன்பு நெறி உடையவர்களாக ஆதல் வேண்டும். அந்த அன்பு நெறியில் தன்னை மறந்து தனக்குத் தனித்தலைவன் உளான் என்ற நிலையை அடைய வேண்டும். அதற்குக் கண்ணைக் கூட ஈதற்குத் தயாராக இருத்தல்வேண்டும். சிவாபராதம் செய்பவர் தனது தந்தையே யாயினும் ஒறுக்கின்ற உறுதி வேண்டும். அதற்கு வேதபுரீசர் திருவருள் வேண்டும்.ஆகையால் அப்பெருமான் திருவருளை வேண்டி வாழ்த்தி வணங்கி எனது சிற்றுரையை முடிக்கின்றேன்.

ஒன்றுக்கும் பற்றாத எளியேனையும் பட்டிமண்டபம் ஏற்றுவித்து மூலையில் இருந்த என்னை முற்றத்தில் கொண்டு வந்த சைவ சித்தாந்த சமாஜத்தினருக்கு எனது நன்றியைச் செலுத்துகின்றேன். என்னையாள் பன்னிரு கைப் பெருமான்திருவருள் இத்தகைய நெறியிலேயே என்னை நிறுத்தி அருள் புரிய அவன் திருத்தாள்களை வணங்கிவாழ்த்தி அமைகின்றேன்.

— முருகா —

# மதிப்புரை

## சிலம்பு மணிகள்

வெளியிட்டவர்:— மாணிக்கம் பதிப்பகத்தார்,
43, முருகப்ப முதலி தெரு, புரசைப்பாக்கம், சென்னை–7.

விலை ரூ. 2–25.

இதன் ஆசிரியர் வித்துவான் ஆ. சிவலிங்கனார் (தமிழ் விரிவுரையாளர், ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி, மயிலம்) ஆவர். இந்நூலில் ஆசிரியர் 18 தலைப்புகளில் சிலப்பதிகாரத்தை மிகவும் நுட்பமாக ஆய்ந்திருக்கின்றார். சிலப்பதிகாரத்தில் உள்ள பாத்திரங்களை மிகவும் நுண்ணிதின் ஆய்ந்து பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளார். சில ஆராய்ச்சிக் கட்டுரைகளும்

உள. அவைகளின் முடிபு இதுகாறும் மக்களால் கருதப்பட்டு வந்தனவற்றிற்கு மாறுகவும் அமைந்துள்ளது. அவ்வாறு முடிவு செய்ததற்குரிய காரணங்களை ஆசிரியர் தக்கவாறு நிறுவிக்காட்டுகிறுர். சான்றுக இளங்கோவடிகள் சமயம் சமணம் என்றே பலரும் கருதினர். அதற்குமாறுக அடிகள் சைவ சமயத்தினர் என்பதனைத் தக்க சான்றுகளுடன் நிறுவியுள்ளார். இது போன்று பல உண்மைகளை வெளிப்படுத்தி ஆசிரியர்படிப்போரின்சிந்தனைகளைக் கிளப்பிவிட்டிருக்கிறுர். பொதுவாகத் தமிழிலக்கியத்தாகத்தினருக்கும் சிறப்பாகச் சிலப்பதிகாரத்தில் மிகவும் ஈடுபாடுடையோருக்கும் இது இன்றியமையாது வேண்டடத்தக்கதொரு நூலாகும். நூல் நிலையங்களுக்கு அவசியம் வேண்டடத்தக்கதொன்று. அன்பர்கள் யாவரும் படித்துத் தமிழ்ச் சுவையைத்துய்ப்பார்களாக. —அம்பை சங்கரன்.

---

## சமாஜச் செய்தி

26—4—64 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறுர்கள்.

13—4—64 திங்கள் மாலை 6 மணிக்கு சமாஜ அலுவலகத்தின் கீழுள்ள வணிக வைசியமண்டபத்தில் முதியோர் தேவார வகுப்புத் தொடக்கவிழா சமாஜ ஆதரவில் நிகழும். தலைவர் திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியார் அவர்கள் M. A., ஆவர். தொடக்கிவைப்பவர் திரு. M S. சாரங்கபாணி முதலியார் அவர்கள் B. A., B.L., ஆவர். திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் ஆசியுரையும் திரு. அய்யாசுப்பிரமணிய முதலியார் அவர்கள் இவ்வகுப்பின் இன்றியமையாமை குறித்தும் பேசுவர். பலரும் பயன் பெற்றுய்ய வேண்டுகின்ருேம்.

1963-ல் சமாஜத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:—

## சைவப் புலவர் தேர்வு

1. சுப்பிரமணியம் செல்லத்துரை —எண் 111
2. சின்னத்தம்பு சிந்தாமணி —எண் 112
3. குமரேசு மனோன்மணி —எண் 113

(குமரேசு மனோன்மணி அவர்கள் முதல் வகுப்பில் வெற்றி பெற்றதால் அதற்குரிய பரிசுத் தொகையாகக் கடந்த மூன்றாண்டுகளாகச் சேர்ந்துள்ளதொகை முழுவதையும் சேர்த்து ரூ 150-00 (நூற்றைம்பது) பரிசாகக்கொடுக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.)

## இளஞ் சைவப் புலவர் தேர்வு:

1. முத்துக் குமாரசாமி திருஞான சம்பந்த பிள்ளை (முதல் வகுப்பில் வெற்றி பெற்றார்) —எண் 507
2. தம்பு சுவாமிநாதன் —எண் 509 (இரண்டாம் வகுப்பில் வெற்றி பெற்றார்)
3. நாகமுத்தன் விசுவலிங்கம் —எண் 517
4. சின்னத்தம்பி சிற்றம்பலம் —எண் 518
5. ஆ. சிவசுப்பிரமணியம் —எண் 520
6. கந்தையா கதிர்வேல் —எண் 521
7. வைத்திலிங்கம் தையல்நாயகி —எண் 531
8. சிவராசா இராஜேஸ்வரி —எண் 532
9. சிவநிதி கதிர்வேல் —எண் 537
10. சரோஜினி தேவி —எண் 538

---

## சமாஜச் சைவ மாணவர் கோடை வகுப்பு

நம் சைவ மாணவர்களுக்குச் சமய அறிவு விளக்கம் செய்வான் விரும்பி இவ்யாண்டு கோடை விடுமுறையில் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையில் ஒரு கோடை வகுப்பு 4—5—64 முதல் 24—5—64 வரை நிகழும். இவ்யாண்டு S. S. L. C. எழுதி முடித்த ஆண்பாலரய மாணவர்களும்

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் உயர்நிலையில் படிக்கும் மாணவர்களும் மட்டும் இதில் சேர்ந்து கொள்ளலாம். உண்டி உறையுள் முதலிய எல்லா வசதிகளும் இலவசமாகச் செய்து தரப்பெறும். வகுப்பு முடிவில் ஒரு சிறு சோதனையும் நடத்தப்பெறும். சைவப் பெற்றோர்கள் தங்கள் உற்றார் உறவினராயுள்ள மாணவர்களை அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். சமாஜ உறுப்பினர்கள் அங்கங்குள்ளவர்களிடம் இது பற்றிக் கூறி நம் சைவ இளைஞர்களை அனுப்பிவைக்க ஆவன கருதக் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வகுப்பில் சேர விரும்புவோர் 25—4—64க்குள் சமாஜச் செயலாளருக்குத் தங்கள் விண்ணப்பத்தைஅனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கின்றோம். உத்தரவு வீட்டுமுகவரிக்கு அனுப்பி வைக்கப்பெறும். தவறாது வீட்டு முகவரியைக் குறிப்பிடுக.

## சமாஜச் சித்தாந்த சாத்திரக் கோடை வகுப்பு

வழக்கம்போல் இவ்யாண்டும் கோடை விடுமுறையில் தஞ்சை மாவட்டம் மஞ்சக்கொல்லையில் நம் சமாஜக் கோடை வகுப்பு மே 13 முதல் மே 28 வரைநிகழும். திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள் பகலில் சிவப்பிரகாசம் பாடம் நடத்துவார்கள். இரவில் கந்தர்கலிவெண்பாவும், சைவ சமயச் சொற்பொழிவும், பிறசமய விளக்கங்களும் பிரசங்கப் பயிற்சியும் நடக்கும். பெரியோர்கள் யாவரும் கலந்து நம் சமய சம்பந்தமான நல்லுரைகளைக் கேட்டு ஐயத்தினீங்கி இன்புறலாம். உண்டி, உறையுள் முதலிய வசதிகள் 25 பேருக்குச் செய்து தரப்பெறும். அண்மையிலுள்ள பாடல்பெற்ற தலங்களையும் பார்க்கவாய்ப்புண்டு. சேரவிரும்புவோர் சமாஜச் செயலாளருக்கு 25—4—64க்குள் தங்கள் விண்ணப்பத்தை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கின்றோம். அவரவர் வீட்டு முகவரியை விளக்கமாய் மனுவில் குறிப்பிடவேண்டும். உத்தரவு வீட்டு முகவரிக்கு அனுப்பி வைக்கப்பெறும். மஞ்சக் கொல்லை என்பது பஸ் பாதையில் நாகைக்கு மேற்கே ஒரு கல்லில் உள்ளது. சிக்

களுக்குக்கிழக்கே 2 கல். அந்தணப் பேட்டை ரயில் நிலையத்துக்கு வடக்கே 2 பர்லாங்கு தூரம்.

திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள் மார்ச்சு மாதம் 19 ஆம் நாள் யாழ்ப்பாணம் சென்று 29 ஆம் நாள் தமிழகத்துக்குத் திரும்பினர்கள். அங்கு நிகழ்ந்த நம்சமயத் தொண்டுகளாவன:—

1. கடலருகேயுள்ள கீரிமலையில் இரண்டு நாட்கள் அந்தர்யோகம். 2. இந்துப் பெண்கள் கல்லூரியில் ஒரு நாள் முற்பகல் மட்டும் அந்தர்யோகம். 3. யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையிலும் சிவன் கோயிலிலும் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்திலும் முறையே சைவத்தின் தற்கால நிலை, திருவாசகம், சாதனைகள் என்பன பற்றிப் பேசினர்கள். 4. மானிப்பாய் இந்து விருத்தி சங்கத்தில் 'சைவ சமயம்' என்பது பற்றிப் பேச்சு நிகழ்ந்தது. வண்ணர் பண்ணை வைத்தீச்சுர வித்தியாலயம், சுன்னுகம் இராமநாதன் பெண் கல்லூரி, புலோலி ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, வேம்படி பெண் கல்லூரி, தெல்லிப்பிழை யூனியன் கல்லூரி முதலிய பல விடங்களிலும் நம் சமயப் பிரசாரத் தொண்டுகள் செய்தார்கள்.

தெல்லிப்பிழை தேர் வெள்ளோட்டத்தைத் தொடக்கிவைத்தார்கள். யாழ்ப்பாணத்தில் பலருக்குக் குருமூர்த்தியாய் விளங்கி அருள்பாலித்த யோகர் முத்தி தரிசனத்தில் கலந்து கொண்டார்கள். அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினர் தேநீர் விருந்தும் வரவேற்பும் அளித்தனர். (திரு. செட்டியார் அவர்கள் போல் பிற அன்பர்களும் முனையின் நம் சமயம் ஏன் சிறப்புற்றோங்காது. துணையாசிரியர்.)

---

உ

சிவமயம்

" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

அகில இலங்கைச் சைவப் புலவர் பட்டதாரிகள் சங்கம்

மலாய சைவ சித்தாந்த சங்கத் தலைவர்

உயர்திரு. கா. இராமநாதன் B. A., B. L.,

அவர்களை

வரவேற்று அளித்த

# வாழ்த்துப்பா

## நேரிசைவெண்பா

சித்தாந்த வுண்மை செகமுழுதும் வாழவருட்
பித்தான தொண்டர் பெரிதுவக்க — வித்தகனும்
நல்லிராம நாதன் நயந்துசெயுந் தொண்டின்சீர்
சொல்லச் சிவமே துணை

## நேரிசையாசிரியப்பா

சீர்பெறு சைவச் செந்நெறிப் படர்வோ
ரார்தரு மிச்சபைக் கணிதர மருவினே
ரலகி லன்பா னவ்வவர் மனத்துறீஇக்
கலந்தத் துவிதமாய்க் கருதரு மின்ப
முயக்கமா மனுபவம் மன்னுவித் தெம்மு
ளயலற நின்று பயன்தரு பெரியோய்!
விடையுகைத் தருள்செஞ் சடையனுர்க் கன்ப

ராயவர்ப் பராவித் தூயதோ ரின்பம்
மருவுக வுலகெலா மொருவுக துயரென
நாநலந் துணையா நற்பிர சங்கமீந்
தரன்பணி யேபணி யல்லவை பவந்தர
வருபணி; வீண்பணி யெனவிளக் கிடுஞ்சீ
ருவந்துள மிருத்தின முய்ந்தன மைய!
கற்பவை கற்றலுங் கற்றுங் கொழுகலும்
வற்றிய வுலகில் வழுங்கற மழையா
ருளத்துட னெழுந்தரு ளிராமநா தற்பெயர்க்
கருந்தனக் கார்மிகர் வள்ளால்!
வேண்டுது முந்நலம்; வாழிய சிறந்தே

## நேரிசைவெண்பா

சென்னைச் சமாசமே நற்றுயா யெம்மலாய
பின்னைச் சமாசஞ் செவிலியாய் — அன்புதவச்
சைவப் புலவர் சங்கமெனு மிக்குழந்தை
யுய்யுநெறி காட்டு முவந்து.

## கட்டளைக்கலித்துறை

வேதநல் லாகமம் வாழ்க; வவைதேர்ந்த வாலறிவுப்
போதநன் றுற்றார் பொருந்துக பேரின்பம்; பேதமிலாக்
காத லிருத்திக் கசிந்து கசிந்துநின் றென்புருக
வோது மிராமநன் நாத னனையரும் வாழியரே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
சைவப் பிரகாச வித்தியாசாலை
வண்ணார்பண்ணை, 27-3-64

அ. இ. சைவப் புலவர்
பட்டதாரிகள் சங்கத்தினர்